www.tamilarangam.net



## ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்

ஞாயிற்றுக்கிழமை, 13 பெப்ரவரி 2011 02:53

SHARE



இந்தியாவுக்கு விரோதமான நாடுகளுடன் இலங்கை ஏற்படுத்திக்கொண்ட நெருக்கமான உறவுகள் மட்டுமன்றி, இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு புதுடில்லி கொடுத்த அழுத்தங்களை கொழும்பு தட்டிக்கழித்து வந்துள்ளமையும் கூட இந்தியாவுக்கு ஆத்தரத்தைக் கொடுப்பதாக அமைந்தது.

தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான போர் என்பதைக் காட்டியே வெளிநாட்டு இராணுவ உதவிகளை ஜெயவர்த்தன அதிகளவுக்குப் பெற்றுக்கொண்டிருந்தார். இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான அழுத்தத்தைக்கொடுப்பதன் மூலமாக மேற்கு நாடுகள் கொழும்புடன் ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய இராணுவ உறவுகளைத் துண்டித்துக்கொள்ளலாம் என்பதுதான் இந்தியாவின் கணிப்பாக இருந்தது.

இருந்தபோதிலும் ஜெயவர்த்தனவின் கணிப்போ சற்று வித்தியாசமானதாக இருந்தது. இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வைக்காண வேண்டும் என்ற இந்தியாவின் அழுத்தங்களைப் புறக்கணித்து தொடர்ந்தும் போரை முன்னெடுப்பது என்ற ஜெயவர்த்தனவின் கடும் போக்குக்கு பின்னணியாக அல்லது காரணமாக அமைந்தது அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் வழங்கிய உதவிகள்தான். இந்த உதவிகள் காரணமாக தான் ஒரு பாதுகாப்பான நிலையில் இருப்பதாகக் கருதிய ஜெயவர்த்தன, இந்தியாவுடன் மோதல் போக்கு ஒன்றில் செல்வதற்குத் தயாரான நிலைமையைத்தான் இந்தக் காலத்தில் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், தமிழ்ப் போராளிகளை ஆயுதபாணிகளாக்கி தன்கு எதிரான போருக்கு இந்திரா காந்தி அனுப்பிவைப்பார் என ஜெயவர்த்தன கருதியிருக்கமாட்டார்.

இந்தப் பின்னணியில் இலங்கை விவகாரங்களில் தலையிட வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டது. இந்தியாவின் இந்த நிலைப்பாடு தொடர்பாக கொழும்பில் இந்திய உயர் ஸ்தானிகராகப் பதவி வகித்த ஜே.என்.டிக்சிட் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

'தமது தமிழ்க் குடிமக்களுக்கு எதிராக கொழும்பு அரசு கடைப்பிடித்த பாராபட்சமான ஒடுக்குமுறைக் கொள்கைகளினால் ஏற்பட்ட விபரீத விளைவுகள் ஒருபுறம், அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் இலங்கை கொண்டிருந்த உறவுகளால் ஏற்பட்ட தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மறுபுறமுமாக இலங்கையில் இந்தியா தலையிடுவதைத் தவிர்க்க முடியாத விடயங்களாக்கின." (டிக்சிட் எழுதிய Colombo Assignment)

இந்திரா காந்தி எடுத்துக்கொண்ட இந்த நிலைப்பாடு தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'அந்தக் காலகட்டத்தில் இந்திய வெளிவிவகாரக்கொள்கையை நெறிப்படுத்தும் பொறுப்பிலிருந்த இந்திரா காந்தி அம்மையார், இலங்கையில் தலையிடுவதென்ற வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்மானத்தை எடுத்தார். இரண்டு குறிக்கோள்களை அடையும் நோக்கில் இரு முனைச் செயற்பாட்டுத் திட்டத்தை அவரது ஆலோசகர்கள் வகுத்துக்கொடுத்தார்கள். ஒன்று - வெளிப்படையானது. மற்றது - மறைமுகமானது. வெளிப்படையாக சிறீலங்கா அரசுடன் இராஜதந்திர மத்தியஸ்த்த முயற்சிகளை மேற்கொள்வது. மறைமுகமாக தமிழரின் ஆயுதந்தரித்த எதிர்ப்பு இயக்கத்துக்கு உதவி செய்து அதனைக்கட்டியெழுப்புவது. ஒன்றுக்கொன்று முரண்பாடுகளைக் கொண்டதாக இத்திட்டம் அமைந்திருந்த போதிலம், வஞ்சக குணமுடைய கிழட்டு நரி ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவருவதற்கு இதுவே சிறந்த வழி என இந்திய அரசு கருதியது.

இந்திய நலன்களுக்கு விரோதமான அந்நியச் சக்திகளை வெளியேற்றி, இலங்கையை இந்தியாவின் ஆதிக்க வியூகத்துக்குள் கொண்டுவருவது முதலாவது குறிக்கோள். சிறீலங்கா மீது தமி;ழ்ப் புரட்சி இயக்கங்களின் இராணுவ அழுத்தத்தை அதிகரித்து அதன் வாயிலாக தமிழரின் இனப் பிரச்சினைக்கு பேச்சுக்களின் மூலமான தீர்வைக் கொண்டுவருவது இரண்டாவது குறிக்கோள்." (அன்டன் பாலசிங்கம் எழுதிய: போரும் சமாதானமும்)

தெளிந்த இராஜதந்திரியான ஜீ.பார்த்தசாரதியை அரசியல் தீர்வு தொடர்பான சமாதான முயற்சிகளுக்காக கொழும்புக்கு அனுப்பிவைத்த இந்திரா காந்தி, மறுபக்கத்தில் மூன்றாவது ஏஜென்ஸி மூலமாக போராளிகளுக்கான இராணுவப் பயிற்சித் திட்டத்தையும் முடுக்கிவிட்டார். தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு ஆயுதங்களையும் வழங்கும் இந்த சர்ச்சைக்குரிய திட்டத்தை இந்தியப் புலனாய்வு நிறுவனமான றோ அதிகாரிகள் ஆரம்பித்துவைத்தார்கள்.

1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே தமது ஆயுதப் பயிற்சிக்கான திட்டத்தை வகுத்துக்கொண்ட இந்திய அரசு, அதற்காக தமிழகத்தில் அந்தக் காலப்பகுதியில் தங்கியிருந்த ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்களையே முதலில் தொடர்புகொண்டார்கள். தமிழகத்துக்கு வந்திருந்த ஈழத் தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனிப்பதற்காக அமைப்பின் தலைவராக இருந்த எஸ்.ஸி.சந்திரஹாசனை முதலில்

பதிவுகள்

பதிவுகள்

**ஈழமும் இந்தியாவும்-15: பயிற்சி முடிந்து யாழ். திரும்பிய போராளிகள்**



ஈழப் போராளி அமைப்புக்களு இந்திய ஆயுதப் பயிற்சிகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். ஒரு பறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளக்கு உத்தர பிரதேசத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சிகளை வழங்க, மற்றொரு புறத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றம் ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கு இந்திய இராணுவ அதிகாரிகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

**ஈழமும் இந்தியாவும்-14: றோ அதிகாரியை சந்திக்க அவசரமாக தமிழகம் வந்த பிரபாகரன்**



இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பயன்படுத்திக் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் தலைமையைத் தான் எடுத்துக்கொள்வதற்காக சந்திரஹாசன் வகுத்துவைத்திருந்த திட்டம் அன்டன் பாலசிங்கத்துக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்தது. இது சந்திரஹாசனின் திட்டமாக மட்டுமன்றி றோவின் ஒரு பகுதியினரும் இதனை விரும்பியிருப்பதற்கான ஏதுநிலைகளும் காணப்பட்டன.

**More:**

ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..
ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்

சிந்தனைத் துளிகள்

"அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு."

-தேசியத் தலைவர்

பூராயம் - RSS

தமிழீழத் தளங்கள்

தமிழீழக் குழுமம்

தமிழ்வெளி

சமகாலப்பார்வை

சமகாலப்பார்வை

**லசந்தவின் மரணத்தின் பாதை : அரசு கிளப்பும் புதிய சர்ச்சை**




இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருக்கின்றதா? அல்லது இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையில் அவரை மாட்டிவிடுவதற்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

தொடர்புகொண்ட றோ அதிகாரிகள் தமிழ்ப் போராளிகளுக்கான அயுதப் பயிற்சித் திட்டத்துக்கான இணைப்பாளராக அவரையே பயன்படுத்தினார்கள்.

தந்தை எஸ்ஜே.வி.செல்வநாயகத்தின் புதல்வரான சந்திரஹாசன், ரெலோ அமைப்புடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவராக இருந்தமையால், இந்தப் பயிற்சித் திட்டத்தில் அவ்வமைப்புக்கே பிரதான இடம் கிடைத்தது. இதனைவிட ஈரோஸ் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய அமைப்புக்களும் இந்தப் பயிற்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டன.

இந்திய அரசு தமிழ்ப் போராளிகளுக்கு பெருமெடுப்பிலான பயிற்சிகளை வழங்கவுள்ளது என்று தகவல்கள் வெளியானதையடுத்து குறிப்பிட்ட மூன்று அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் யாழ்ப்பாணத்தில் ஆள் திரட்டல்களைத் தீவிரப்படுத்தி படகுகள் மூலமாக தமிழ் இளைஞர்களை பெருமளவுக்கு தமிழகத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இந்த ஆள் திரட்டல்களைப் பொறுத்தவரையில் ரெலோ அமைப்புத்தான் முன்னணியில் இருந்தது. ஈ.பி.ஆர்.எல். அமைப்பினரும் ஓரளவுக்கு ஆள் திரட்டலை மேற்கொண்ட போதிலும், ஈரோஸ் அமைப்பைப் பொறுத்தவரையில்அ அது ஆள்திரட்டலில் மிகவும் நிதானமான போக்கையே கடைப்பிடித்தது.

யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை, மாதகல் மற்றும் தீவுப் பகுதிகளிலிருந்து தினசரி இரவு வேளைகளில் புறப்படும் படகுகள் இருளைக் கிளித்துக்கொண்டு, இலங்கைக் கடற்படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுச் செல்லும் காட்சிகள் தினசரி நிகழ்ச்சிகளாகியிருந்தன. அப்போதுதான் மீசை முளைக்கத் தொடங்கிய இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக தாயகத்தை மீட்கும் கனவுகளைச் சுமந்தவர்களாக அம்மாவுக்கும், அப்பாவுக்கும் கடிதங்களை எழுதி வைத்துவிட்டு உடுத்த உடைகளுடன் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பினர் குருநகர் மற்றும் தீவுப் பகுதிகளிலிருந்து தமது படகுகளைச் செலுத்திய அதேவேளையில், ரெலோ அமைப்பின் படகுகள் பெரும்பாலும் வல்வெட்டித்துறையிலிருந்து புறப்படும். ஈரோஸைப் பொறுத்தவரையில் இவ்வாறு பயிற்சிக்காக படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே இருந்தது.

இந்தக் கட்டுரைத் தொடரை கவனமாகப் படிக்கும் வாசகர்களிடம் இந்த இடத்தில் நிச்சயமாக ஒரு கேள்வி எழும்!

ஆம், விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தப் பயிற்சித் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லையா என்பதுதான் அந்தக் கேள்வி. ஆம், களத்தில் பலமான அமைப்பாக இருந்தாலும் இந்தியப் பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளடக்கப்படவில்லை என்பது உண்மைதான். பலிகளுக்கு மட்டுமன்றி புளொட் அமைப்புக்கும் இந்தியாவின் ஆயுதப் பயிற்சி முதலில் கிடைக்கவில்லை. இந்த இரு அமைப்புக்களும் இந்தியாவினால் கவனத்திற் கொள்ளப்படாமைக்கு ஒரு காரணம் இருக்கின்றது.

இதன் பின்னணியிலுள்ள சுவாரஸ்யமான அரசியல் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்...

பூராயத்துக்காக
**சிவயோகன்**

Add Comment

இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது (ஞாயிற்றுக்கிழமை, 13 பெப்ரவரி 2011 04:53)

முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

**மும்பையில் மகிந்தருக்கு கிடைத்த இரட்டைத் தோல்வி: புலனாய்வுத் தகவல்கள்**



உலகக் கிண்ணத்துக்க கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்தது என்பதைவிட, இந்தப் போட்டியின் போது இந்தியாவினால் இலங்கை- குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்ட முறையில் அவமானப்படுத்தப்பட்டதுதான் கொழும்புக்குப் பெரும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இந்தியாவால் அவமானப்படுத்தப்பட்டதை சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திண்டாடுகின்றது இலங்கை அரசு.

**More:**

- யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவு: வடக்கின் வசந்தம் தந்த பரிசு
- கூட்டமைப்பின் 'தீர்வுப் பொதி': அரசைத் திருப்திப்படுத்தவா?
- லிபியா நனைகிறது என்று இலங்கை அழுகிறது

இணைப்புக்கள்

**தமிழ்ச் செய்திகள்**
ஈழநேசன்
மீனகம்
யாழ் இணையம்
பி.பி.சி தமிழோசை
லங்காசிறி
செய்திகள்
தமிழ்வின்
மனிதன்
2 தமிழ்
அதிர்வு
சரிதம்
புதினம்நியூஸ்
புதினப்பலகை
இன்போ தமிழ்
தமிழ்ஸ்பை
வன்னிஒன்லைன்
தமிழ்உலகம்
தமிழ்சிஎன்என்
சங்கதி
பதிவு
ஈழம் பிறஸ்
யுகே தமிழ்நியூஸ்
தமிழ்த்தாய்
தமிழ்ச்செய்தி
தாய்நிலம்
ஈழம்வெப்

**ஆங்கிலச் செய்திகள்**
TamilNet
TamilNational
DailyMirror
SundayTimes
SundayLeader
Nation
LakbimaNews
TheBottomLine
TamilWeek
LankaPage
ColomboPage
TheAcademic
TamileelamNews
TamilCanadian
UKTamilNews
Sangam
TorontoTamil
Reuters
MSNBC
Yahoo
BBC
Google
Worldnews
CNN

**இணைய சஞ்சிகைகள்**
ஈழநேசன்
அப்பால்தமிழ்
தெனாலி
தமிழில் கல்வி
தமிழ்சினிமா
பதிவுகள்
தமிழ்
அப்புசாமி
சினிசவுத்
கோல்டன் தமிழ்
நெற்தமிழ்
மங்கையர் மலர்
வெப் தமிழன்
திண்ணை
தமிழோவியம்
சுரதா
காலச்சுவடு
கூடல்
வார்ப்பு
நெய்தல்
கவிமலர்
தமிழோசை
எழில்நிலா
ஈழம் வோல்பேப்பர்ஸ்
தமிழம்
தமிழ்மணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்